# தமிழ்ப் பல்கலைக்கழகம்

**தஞ்சாவூர் - 613010**

**தமிழ்நாடு, தென்னிந்தியா**

**தொ.பே.எண்** : 04362 – 227151

**மின்னஞ்சல்** : coetamiluniv@gmail.com

**தொலைநகலி** : 04362-226159

THE TAMIL UNIVERSITY

THANJAVUR – 613010

SOUTH INDIA, TAMIL NADU

TELEPHONE : 04362 - 227151

EMAIL : coetamiluniv@gmail.com

ELEFAX : 04362-226159

முனைவர் பெ.இளையாப்பிள்ளை
தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)


ந.க.எண். தே3/ 2024, நாள்: 02.12.2024

சுற்றறிக்கை

பொருள்: வளாகக் கல்வித் தேர்வுகள் – திசம்பர் 2024 பருவத் தேர்வுகள் – தேர்வுகால அட்டவணை வெளியிடுதல் மற்றும் தேர்வுக் கட்டண விவரங்கள் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை: துணைவேந்தர் (பொ.) அவர்களிள் ஆணை, நாள்: 28.11.2024

-----

பார்வையில் காணும் துணைவேந்தர் பொறுப்பு அவர்களின் ஆணையின்படி தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதுகலை சிற்பம், இசை, நாடகம், கடல்சார் வரலாறு, இலக்கியம், மொழியியல், முதுஅறிவியல் (முதல், மூன்றாம் பருவங்கள்) ஒருங்கிணைந்த முதுகலை தமிழ், வரலாறு, (முதல், மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பாதாம் பருவங்கள்) ஆய்வியல் நிறைஞர் நிலுவைத் தேர்வுகள், முனைவர் பட்ட பயிற்சிப்பணி தேர்வுகள், பட்டயம் மற்றும் சான்றிதழ் ஆகிய பாடங்களுக்குத் திசம்பர் 2024க்கானப் பருவத் தேர்வுகள் 18.12.2024 முதல் 30.12.2024 வரை நடைபெற உள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் தேர்வுக்கால அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இத்தேர்வுகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டண விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன. தேர்வுகள் குறித்த விவரங்களை துறைத்தலைவர்கள் மாணவர்களுக்குத் தெரிவிக்குமாறு கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது .

திசம்பர் 2024 பருவத் தேர்விற்கு முன்னதாக செய்முறைத் தேர்வுகளை நடத்துமாறும், செய்முறைத் தேர்வுகள் நடத்துவதற்கேற்ப வல்லுநர் பட்டியல் மற்றும் தேதி விவரங்களை தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்(பொ.) அவர்களுக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பெறுகிறது.

**தேர்வுக் கட்டண விவரம்**

**முதுகலை, முதுநுண்கலை, முதுஅறிவியல் (முதல் மற்றும் மூன்றாம் பருவங்கள்)**

**ஒருங்கிணைந்த முதுகலை தமிழ் வரலாறு (முதல், மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பாதாம் பருவங்கள்)**

| தேர்வுக் கட்டண விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | படிப்பு | விண்ணப்பக் கட்டணம் | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | தேர்வுக் கட்டணம் | செய்முறைத் தேர்வுக் கட்டணம் |
| 1. | சிற்பம்/ இசை/ நாடகம் | 100 | 100 | தாள் ஒன்றுக்கு ரூ.200/- | தாள் ஒன்றுக்கு ரூ.500/- |
| 2. | வரலாறு | 100 | 100 | தாள் ஒன்றுக்கு ரூ.200/- | - |
| 3. | தமிழ்/ மொழியியல்/ | 100 | 100 | தாள் ஒன்றுக்கு ரூ.200/- | - |
| 4. | முது அறிவியல் | 100 | 100 | தாள் ஒன்றுக்கு ரூ.200/- | தாள் ஒன்றுக்கு ரூ.500/- |
| 5. | பட்டயம்/ சான்றிதழ் | 100 | 100 | தாள் ஒன்றுக்கு ரூ.200/- | தாள் ஒன்றுக்கு ரூ.500/- |
| | சான்றிதழ் கட்டணம் ரூ.300/-ஒட்டுமொத்த மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் ரூ.250/- (பட்டயம், சான்றிதழ் மட்டும்) | | | | |
| 6. | ஆய்வியல் நிறைஞர் | 100 | 100 | தாள் ஒன்றுக்கு ரூ.300/- | |
| 7. | முனைவர் பட்டம் (பயிற்சிப்பணி) | 100 | 100 | தாள் ஒன்றுக்கு ரூ.300/- | |

- ✓ **தேர்வுக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க கடைசி நாள் : 11.12.2024**
- ✓ **ரூ.100/ தாமதக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க கடைசி நாள்: 13.12.2024**
- ✓ **ரூ.500/- தாமதக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க கடைசி நாள்: 16.12.2024**

பருவக் கட்டணங்கள், விடுதி கட்டணங்களை தவறாது செலுத்திய மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத இயலும். பருவக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டு நகல் தேர்வு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். ஒருமுறை செலுத்தப்பட்ட தேர்வுக் கட்டணங்கள் எந்த ஒரு நிலையிலும் மீளப் பெறவோ அல்லது அடுத்துவரும் தேர்வுக்கு ஈடுசெய்யவோ இயலாது. பருவத் தேர்விற்கு முதல்முறை விண்ணப்பிக்கும்போது அனைத்துத் தாள்களுக்கும் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். உரிய காலத்தில் தேர்வு கட்டணத்தைச் செலுத்தாதவர்கள் தேர்வினை எழுத இயலாது.

மாணவர்கள் தேர்வு விண்ணப்பத்தில் முழு விவரத்தையும் சரியாக பூர்த்திசெய்ய வேண்டும். தவறாக நிரப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அம்மாணவர் தேர்விற்கு அனுமதிக்கப்படமாட்டார். மாணவர்கள் தங்களது விடைத்தாளில் பதிவெண்ணைத் தெளிவாகவும், சரியாகவும் எழுதவேண்டும். தவறாக பதிவெண் எழுதிய விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது. இதற்கு பல்கலைக்கழகம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது என்ற விவரம் தெரிவிக்கப்பெறுகிறது.

தேர்வு எழுதும் மாணவர்களுக்குக் குறைந்த பட்சமாக வருகை 75% இருக்க வேண்டும், 74% முதல் 65% வரை வருகைப் பதிவு பெற்றுள்ள மாணவர்கள் மருத்துவச் சான்றிதழ் அடிப்படையில் தண்டக் கட்டணமாக ரூ.250/-ஐ செலுத்த வேண்டும். வருகைப் பதிவு 65% கீழ் உள்ளவர்கள் தேர்வு எழுத தகுதியானவர்கள் இல்லை என்ற விவரமும் தெரிவிக்கப்பெறுகிறது.

02.12.24

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ.)

**பெறுநர்**

**துறைத்தலைவர்கள்**

1. சிற்பத்துறை
2. இசைத்துறை
3. நாடகத்துறை
4. கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை
5. கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்துறை
6. அரியகையெழுத்துச் சுவடித் துறை
7. ஓலைச்சுவடித் துறை
8. கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை
9. மொழிபெயர்ப்புத் துறை
10. இலக்கியத்துறை
11. மொழியியல்துறை
12. நாட்டுப்புறவியல் துறை
13. இந்தியமொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி
14. சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை
15. தொல்லறிவியல்துறை
16. தொழில் மற்றும் நில அறிவியல் துறை
17. கணிப்பொறி அறிவியல் துறை

**நகல்**

1. துணைவேந்தரவர்கள் செயலகம், 2. பதிவாளர் செயலகம், 3. நிதிப்பிரிவு, 4. சேர்க்கைப் பிரிவு,
5. பொறியியல் பிரிவு (மின் விசிறி மற்றும் மின் விளக்குகள் சரிபார்த்தல்), 6. மக்கள் தொடர்பு பிரிவு.